1974 மார்ச் 13]

வியாபாரிகளுக்கு கிலோ ரூ. 3 அளவில்தான் கொடுக்கிறோம். அவர்கள் லாபம வைக்கிறபோதும் கூட ரூ. 6-க்குக் குறைவாகவேதான் இருக்கும். வெளிமார்க்கெட்டைவிட நிச்சயமாக இது கூடியிருக்க முடியாது.

Wages for employees in Cinchona Plantations.

* 407 *Q*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Minimum Wages Committee has recommended recently to the Government that the wages to the workers in Cinchona Plantations should be on a par with workers in other plantations ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) and (இ): சின்கோனு தோட்டத்தில் வேலைக்கான குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயம் செய்யும்போது, ஏனைய மலைத்தோட்டப் பயிர்கள் குறித்து நிலவிவரும் ஊதிய வீதங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டுமென்றும், மேற்படி காரியத்திற்காக காப்பித்தோட்டங்களில் கொடுக்கப்படும் ஊதிய வீதங்களையேனும் பின்பற்றலாமென்றும் குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனைக் குழு பரிவுரை செய்தது.

திரு. என்.கே. பழனிசாமி: 1959 ஆம் ஆண்டு மினிமம் வேஜஸ் ஆக்ட் பிரகாரம் 3 வருஷங்களுக்கு ஒரு முறை குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி இருக்கிறபோது, இப்போது ஏறியுள்ள விலைவாசிகளைக் கணக்கில் கொண்டு, அவர்களது குறைந்த பட்ச கூலியை உயர்த்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த அரசு வந்த பிறகு சிங்கோனு தொழிலாளர்களுக்கு 1—2—1973 அன்றுதான் குறைந்த பட்ச கூலி நிர்ணயித்து நடைமுறைக்கு வந்திருக்கிறது. தற்போதுள்ள விலைவாசி உயர்வைக் கணக்கில் கொண்டு மீண்டும் இவர்களது குறைந்த பட்சக் கூலியைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றால் பரிசீலனை செய்ய அரசு தயார். ஆனால் காப்பி, தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல கொடுப்பதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ல் புதிய குறைந்த பட்சக் கூலி விகிதம் வந்த பிறகு 1973-லும், 1974 தொடக்கத்திலும் விலைவாசிகள் ஏகமாக ஏறிவிட்டன என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே அவர்களது கூலி விகிதத்தை காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்பவர்களுக்கு உள்ளதுபோல உயர்த்த முன்வருவார்களா ?

[1974 மார்ச் 18

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைத்தான் சொன்னேன். காப்பி, தேயிலைத் தோட்டங்கள் லாபம் வருகிற தொழில், அதுபோன்றது அல்ல இது. அங்கே கொடுக்கப்படுகிற கூலியை இங்கே கொடுக்க முடியாது. இவர்களது குறைந்த பட்சக் கூலியை எப்படி உயர்த்தலாம் என்பதுபற்றிக் தனியாகப் பரிசீலனை செய்யவேண்டு மென்றால் செய்வதற்கு அரசு தயார்.

திரு என். கே. பழனிசாமி: மற்ற தொழில்களுக்கு எல்லாம் போனஸ் கொடுக்கப்படுகிறது, அதேமாதிரி இந்தத் தொழிலிலும் 10 லட்சம் லாபம் வந்திருக்கிற காரணத்தினால் இவர்களுக்கும் போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சிங்கோனா தொழிலில் தொடர்ந்து நட்டம் தான் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு லாபம் வந்திருப்பதாக உறுப்பினர் சொல்லித்தான் அறிகிறேன். லாபம் வந்திருக்கிறதா என்று பார்த்து, அவர்களுக்கு என்ன பரிகாரம் காண முடியும் என்பதை ஆலோசனை செய்யலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சிங்கோனா தோட்டம் அரசாங்கத்தினால் நடத்தப்படுகிறது. தனியார் நடத்துகிற காப்பி, தேயிலைத் தோட்டங்களில் லாபம் ஏற்பட்டு வருகிறது. இதில் நட்டம் ஏற்பட்டு வருகிறது. ஆகவே இங்கே குறைந்தபட்சக் கூலி தரப்படுவதாகச் சொன்னார்கள். இரண்டு இடத்திலும் செய்யப்படுகிற வேலை ஒன்றே தவிர, லாபம் வருகிறதா, நட்டம் வருகிறதா என்பது பிரச்சினை அல்ல. ஆகவே, வாழ்வுக்குத் தேவை யான அடிப்படையில், எந்த வேலையாக இருந்தாலும் கூலி கொடுத்தாக வேண்டியது கடமை. இன்றைக்குக் குறைந்த பட்ச கூலியாக இவர்களுக்கு என்ன அளிக்கப்படுகிறது, மற்ற இடத்தில் என்ன அளிக்கப்படுகிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதைவிட, சிங்கோனா தோட்டத்தில் வேலை செய்வது மிகவும் சுலபமானது. ஆகவேதான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கூலி விகிதம் இங்கே கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக, அவர் களுக்கு இன்றைய தினம் என்ன கூலி விகிதம் அளிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன். கிரேட் 1 தொழிலாளர்களுக்கு முன்பு 2·80 கொடுக்கப் பட்டது 1—2—1973 இல் 2·95 காசாக நிர்ணயிக்கப்பட்டது.

திரு. எம். தேவராசன் : போனஸ் சட்டத்தின் கீழ் லாபம் இல்லை என்றாலும் மினிமம் போனஸ் கொடுக்க வேண்டுமே, அதை இங்கே கொடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : போனஸ் சட்டம் இதுவரையிலே பிளான்டேஷன்களுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு வரும்போது இதுவும் சேர்ந்து கவனிக்கப்படும் என்று கருதுகிறேன்.